

# செங்குந்த குலத் தோன்றல்

# அமரர் மயில்வாகனம் நந்தீஸ்வரன்

# அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 17.03.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



அமரர்

# மயில்வாகனம் நந்தீஸ்வரன்

## அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு மலர்

## 17.03.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்





எம் குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்து

இந்த வையத்தில் எம்மை வாழ வைத்த எம்

தெய்வமே! இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ –

எம்

உயர்விற்காய் அயராது உழைத்து

எம்மை எல்லாம் மேலோங்க வைத்த எம்

குலவிளக்கே!

காயமே இது பொய் – வெறும்

மரணமே மெய் என்று

கணப்பொழுதில் பிரிந்து போனதேனோ?

இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட

எங்கள் அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களில்

இந்தப் புனித மலரினை சமர்ப்பணம் செய்து

வணங்குகின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்து வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 | 26 |
| 07 | 01 |
| 1965 | 2013 |

# அமரர்

# மயில்வாகனம் நந்தீஸ்வரன் JP (பவா)

[ அகில இலங்கை சமாதான நீதவான், தொழில்நுட்ப உத்தியோகத்தர்
உடற் கூற்றியத்துறை – மருத்துவபீடம் யாழ் பல்கலைக்கழகம்]

## திதி வெண்பா

நந்தன வருடத்து தைத் திங்கள் பௌர்ணமி பிறையில்
பண்பின் சிகரமாய் பாரினில் – நீண்ட புகழ்
நந்தீஸ்வரன் காயம் தீர்த்து வேளாதோப்பு
அம்மன் திருவடிக் கீழ் சங்கமித்தார்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



கடவுள் வாழ்த்து
இறைதுதிப்பாக்கள்

## விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்து இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்
தென் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாாரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்ட நீ அருளிலே ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள்புரி யாயே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தொருவே
ஐயா! நீ உலாப்போந்த
அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழுது அருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே
-கருவூர்த்தேவர்-

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்கள்
திசையனைத் தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும்
பல்லாண்டு கூறுதுமே
-சேந்தனர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம்

யாவர்க்கு மாம் இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு விற்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம் பிறர்க் கின்னுரை தானே.

-திருமூலர்-

## பெரியபுராணம்

இறவாத வின்ப வன்பு வேண்டிய பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் மின்னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடம் போதுன் அடியின் கீழ்
இருக்க வென்றார்.

## அம்பாள் துதி

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவஸ் ஸ்வக
தத் ஸவிர்துர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
திய் யோ யோந ப்ரசோதயாத்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எல்லாம் எல்லாசக்தியையும் ஆற்றலையும் எமக்குத்
தந்தருள்க என்று இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் நந்தீஸ்வரனின் வம்ச வரலாறு...

ஈழ மணி திரு நாட்டின் மணி மகுடமாம் யாழ்ப்பாணத்தில் இருபாலை என்னும் கிராமத்தில் வேளாதோப்பு பகுதியில் முருகப் பெருமானின் சகோதரர்களாகியும் படைவீரர்களாகியும் உடைய நவவீரருடைய வம்சாவழியினராகிய செங்குந்தர் குல மரபிலே தோன்றிய மயில்வாகனம் இராசம்மா தம்பதியர்க்கு கனிஸ்ட புதல்வனாய் 1965ஆம் ஆண்டு ஆடி மாதம் 11ஆம் திகதி வந்துதித்தார். நந்தீஸ்வரன் அவர் வீட்டில் கடைசிப் பிள்ளையாக இருந்தமையால் அவரை வீட்டில் செல்லமாக பவா என்றும் பவாகுட்டி என்று அழைக்கப்பட்டு வரலானார்.

அவர் கௌரியம்மா லோகநாயகியினை அன்புச் சகோதரிகளாகவும் தவராஜா கிருஸ்ணபாலராஜா கருணேஸ்வரன் ஆகியோரினை பாசமிகு சகோதரர்களாகவும் காலம் சென்ற விபுலானந்தன். மற்றும் இராமஜெயம். ராஜீ ஞானபூங்கோதை. அருணா என்பவர்களை அன்பு மைத்துனன் மைத்துனியாகவும் கொண்டு திகழ்ந்தார். இவர்களை போலவே உடன் பிறவாத சகோதர சகோதரி மேல் அன்பும் பாசமும் கொண்டிருந்தார். அத்துடன் தனது சகோதரத்தின் பிள்ளைகள் மீதும் அன்பும் பாசமும் அரவணைப்பும் வைத்து நல்வழி காட்டி வந்தார்.

இவர் ஆரம்ப கல்வியை காசிப்பிள்ளை வித்தியாசாலையிலும் அதனை தொடர்ந்து செங்குந்தா இந்துக்கல்லூரியிலும் தொடர்ந்து கல்விகற்று கல்வியுடன் நற்பழக்கம் பணிவு என அனைத்தையும் நலமுடனே கற்று 1987ஆம் ஆண்டு கைதடி சித்த மருத்துவத் துறையில் ஆய்வு கூட உதவியாளர் பணியினை ஆர்வமுடன் ஆற்றி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்த மருத்துவ துறையில் சேவையாற்றி வரும் வேளையில் தனது தகப்பனாரை 1990ஆம் ஆண்டு இழந்தார். தகப்பனாரும் இறந்த பொழுது இவருக்கு வயது 25ஆகும். தகப்பனார் இறந்த நாளில் இருந்து வீட்டு பொறுப்பை நடாத்தி வந்தார் எதற்கும் மனம் தளராது எல்லோருக்கும் ஆறுதல் வார்த்தை கூறி வந்தார். வீட்டில் தனக்கு வருத்தம் என்று படுக்கையில் கிடந்து மற்றவர்களுக்கு அதை பெரிது படுத்திக் காட்டாது காய்ச்சல் இருமல் வந்தாலும் அதற்கேற்ற வைத்தியத்தை தானே செய்து கொண்டிருப்பார்.

தனது உடலை நோய் இன்றி பாதுகாப்பதற்காக ஒவ்வொரு நாளும் தேகப்பியாசப் பயிற்சியில் ஈடுபட்டு வருவதுடன் எல்லோருக்கும் ஒவ்வொரு வருத்தத்துக்கும் இந்த இந்த பயிற்சி செய்தால் நல்லது என அறிவுரை வழங்குவார். இந்த பயிற்சி பெறுவதற்கு 2005ஆம் ஆண்டு இந்தியாவுக்கு சென்று பயிற்சி பெற்று வந்து இங்குள்ள பலரை அப் பயிற்சியில் ஈடுபட வைத்துள்ளார்.

சமூக சேவைகளில் தன்னை அர்ப்பணித்த இவர் தன் திறமையால் 2004ஆம் ஆண்டு தை மாதம் அகில இலங்கை சமாதான நீதவான் பட்டத்தை பெற்று அப் பதவி ஊடாக தமது சமூகத்து மக்களின் முன்னேற்றத்துக்கு பங்களிப்பு செய்து வந்தார் சமாதான நீதவான்களின் மனித உரிமைகளின் அமைப்புடனும் சேர்ந்து இன்றுவரை செயற்பட்டு வந்தார்.இவ்வாறு செயற்பட்டு வரும் வேளையில் தாய் சகோதரரின் விருப்பத்திற் கேற்ப பண்டத் தரிப்பு பிரான்பற்று பகுதியை சேர்ந்த சிவப்பிரகாசம் பவளரத்தினம் தம்பதியினரின் கனிஸ்ட புதல்வி நிலஒளிமலரை உள்ளம் கொண்ட துணைவியாய் ஏற்று இல் வாழ்வை தொடர்ந்தார். தனது விடா முயற்சியாலும் அயராது உழைப்பாலும் தொழில் நுட்ப உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்று 2011-10-03 இல் யாழ் பல்கலைக் கழக உடற் கூற்றியற் துறையில் தனது பணியினை அர்ப்பணிப்புடன் ஆற்றி வந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை தவிர்ந்த ஏனைய காலப்பகுதியினை சமூக சமய பணிகளில் சேவை ஆற்றி வந்தார் அதற்காக கிராம அபிவிருத்தி சங்க தலைவராக இருந்து தமது கிராமத்து வாழ்மக்களுக்கு சேவை ஆற்றி வந்ததுடன் அந்த மக்களுக்கு எமது சமய அறிவை வளர்ப்பதற்கு அண்மையில் விவேகானந்தா சபையுடன் இணைந்து அச் சபையின் உறுப்பினராக சேர்ந்து அண்மையில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் 150ஆவது ஆண்டு விழாவிற்கு தமது கிராமத்து மக்களை அழைத்து சென்று அங்கு நடந்த சொற்பொழிவை கேட்கவைத்து சமயத்தை வளர்ப்பதில் ஆர்வம் காட்டி வந்தார்.

தான் பிறந்த வேளாதோப்பு ஸ்ரீ மதுரை மகா முத்துமாரி அம்மனின் ஆலய வளர்ச்சிக்கு தன் சேவை தேவை என்பதனை உணர்ந்து நேரம் காலம் பாராது தாயவள் வளர்ச்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து அம்பாளின் ஆலய கும்பாபிசேகத்தை திறம்பட நடாத்தி மகோற்சவ திருவிழாவையும் நடாத்தி உள்ளம் மிக மகிழ்ந்திருந்தார். தைப்பூசத்தன்று முருகனை இருப்பிடத்தில் வைப்தற்கு முயற்சி கைகூடி வந்த நேரம் காலன் கைபிடியில் அகப்பட்டு விட்டாரே. விதியின் சதியா இது? சிந்தையில் தினமும் ஆலய வளர்ச்சிக்கே தன்னை அர்ப்பணித்து வந்தார்.

சமூக சேவை ஆலய திருப்பணி என தன்னையே தியாகம் செய்து அர்ப்பணித்து வாழ்ந்த அண்ணாரின் வாழ்வை மண்ணுலகில் நீர் வாழ்ந்த காலம் போதுமென அன்னை நினைத்தாவோ என்னவோ தன் உறவினரின் மணக்கோலம் காணமுள்ளியவளை சென்ற வேளை விபத்தொன்றில் சிக்கி காலனவன் கையில் அகப்பட்டு இப் பூவுலக வாழ்வை நீத்து இறைவனடி சென்றடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர்களை இறைவன் மிக விரைவாக தன்னிடத்தில் அழைத்துக் கொள்வான். என்ற நம்பிக்கையை மெய்ப்பிப்பது போல அமரர் நந்தீஸ்வரன் அவர்கள் யாரும் எதிர் பாராத வகையில் தான் பழகிய நேசித்த எல்லோரையும் ஆழ்ந்த கவலையில் மூழ்கடித்து விட்டு ஒரு மனிதன் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பது முக்கியம் அல்ல எப்படி வாழ்ந்தான் என்பது தான் முக்கியம் என்ற வாக்கினை மெய்ப்பித்து காட்டி தனது நாற்பத்தேளாவது வயதில் 26/01/2013 இல் இறைவனடி சேர்ந்து விட்டார். அவரது பூதவுடல் இவ் பூவுலகை விட்டு மறைந்து சென்றாலும் அவர் நம்பிக்கை வைத்த இறைவனின் பாதங்களில் சாந்தி அடைவதாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பொறுப்புக்களை சுமந்த மகனே...

பெற்றெடுத்த வயிறு தான் என் நாளும் பற்றி தான் எரிகிறது என் மகனே! பெற்ற தாய் கதறியள பிரிய மனம் வந்ததுவோ. பெருமை பெற வளர்ந்து விட்டு இடைநடுவில் பிரிய மனம் வந்ததுவோ என் வீட்டை கண்ணை இமைகாப்பது போலகாத்து நின்றாயே - என் பவா இருக்கின்றான் என்ற தைரியத்தில் உன் மருமக்களை பார்த்து இந்தியாவில் இருந்த வேளை வந்ததடா ஓர் செய்தி! வந்த செய்தி!! என் மனக் கோட்டைகளை தவிடு பொடியாக்கி சென்று விட்டதே என்னை கதறி அழ வைத்துவிட்டு என் கடமைகளை செய்ய வைக்காது உன்னை ஆத்தாள் தன் பாதத்தில் சேர்த்துக் கொண்டாவோ! என் மகனை நான் இனி எங்கு காண்பேன்!!!

ஆத்தாளே நீ தான் எனக்கு பதில் சொல்வாய்

அன்புத் தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி புலம்பல்...

முன்செய்த தவத்தினால் எமக்கென்று
கணவனாய்
சிந்தை களிப்புற மணஞ்செய்து எனைக்காத்த
நாயகனே
சீருடனே வாழ்வளித்த செல்வச்சிகாமணியே!
பாரினில் உமைப்பிரிந்து பாவியனையாள்
பதறுகிறேன்

மூப்பு எனை விட்டகலாமுன் எனைப்
பிரிந்தாயே!
செப்புறுவுன் தேவியென்றும் சேர்வுறக்
கதியேயில்லை
இப்புவிதனில் மேலாம் ஏற்ற நற்கணவராக
அன்புடன் கூடி வாழ்ந்தகாலம் கனவாகி
விட்டதேனோ!

உன்னைநான் பிரிந்தினி எவ்வாறு வாழ்வேன்
இங்கே!
கதியிலாக்கலம் போலானேன் தோகைவாய்
பாம்பதானேன்
மதியில்லா வானமானேன் மன்னனில்லா
நாடேதானேன்
பதியில்லாப்பாவி வாழ்வு பாலைபோல்
காணலாயிற்றே ஐயா!

அன்பு மனைவி
(நிலா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருயிர் சகோதரனே...

ஆறாதடா நீதந்த பிரிவு !
இறுதிவேளையிலும் உனைப்பார்க்க
இயலாமல் போனது காலத்தின் சதியோ!!

உன்தன்முகம் என்மனதில்
உணர்வுகளை உருக்குதடா !

நான் பிறந்தநாளில் நீ பிறந்தாயடா - இன்று
நாதியற்றவன் போலாகினேன் நீயின்றி !

ஈஸ்வரன் என்று பெயர்பெற்றோம் இருவரும்
ஈஸ்வரன் அழைத்தானே உன்னை இடையில் !

நீதியினை கையில்லேந்தி - சமாதான
நீதிபதியும் ஆனாயடா

பாதியிலே சென்றாயடா
பாசத்தால் தவிக்கின்றேனடா !

தர்மம் பலசெய்ததினால்
தரணியில் வாழவிடல்லையோ வேளாதோப்பு
அம்மன்!

வேந்தனே இனி உனக்கு
வேளாதோப்பு அம்மன் துணை யிருப்பாள்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அண்ணா கருணேஸ்வரன் குடும்பம்
பிரான்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாத்துயரத்தில்அண்ணன்

தனக்கெனவாழாததம்பியேதரணியிலெம்
மனக்கணக்கைஎல்லாம்மாயைஆக்கினாயோ
கனமதைஇதயமேற்றிகதறியழஏன்விட்டாய்
தினமினிநீஇல்லையெனதெய்வமாய்ஆனாயோ

நெஞ்சில்உன்நினைவுநிஜமாகநிற்கிறது
கொஞ்சும்உன்பேச்சுகூடவேவருகிறது
பிஞ்சுமனநந்தீஸாபிரிந்தாயோஎம்மைவிட்டு
மிஞ்சிவிட்டான்காலனவன்மீளவழிஇல்லையாடா

இருவர்பிறந்தநாட்கள்இரண்டும்ஒன்றல்லவா
ஒருவராய்நான்மகிழஒப்புமாயினிஎன்னிதயம்கற்பக
தருபெருவிருட்சமேதம்பியேநந்தீஸா
உருவமாய்உன்னையினிஉலகினிலேகாண்பேனா

கண்டமுகம்காண்பதெங்கேகனிமொழியும்
கேட்பதெங்கே
அண்டமிதில்உனைபோலினிஅரவணைக்கயாருண்டு
கொண்டஅன்புள்ளங்களின்குடியிரு ந்தகோயிலானாய்
தொண்டாற்றும்தூயவனேதுடிக்கின்றோம்நீயெங்கே

பூப்போன்றமனமும்பொலிவானமுகமுமினி
புவியினிலேபோதுமென்றுபுறப்பட்டுபோனாயோ
கூப்பிட்டானோஇறைவனெம்
குடும்பத்திலிருந்துன்னை
குவிக்கின்றோம்கரங்களைகூடட்டும்ஆத்மசாந்தி

நீசென்றபாதையிலேநீரோடைஓடட்டும்
தீகூடதணிந்துவந்துதென்றலாய்வீசட்டும்
வானவர்கள்தேவர்கள்வரவேற்றுஏற்கட்டும்
போனஇடம்உனதாத்மாபெற்றிடட்டும்சாந்திசாந்தி

திருகருணேஸ்வரன்குடும்பம்பிரான்ஸ் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமுள்ள தம்பி...

கண்ணீர் பூக்கள்
ஆருயிர் சகோதரனே கொடுத்த வலி போதுமடா
ஆலமரமாக நிழல் தந்த விருட்சம் போனதடா!
எந்த நாளும் இனிமையாக இருந்த வீட்டில் இடியொன்று வந்ததுவோ

நீ செய்த சேவைகளை என் மனதில் ஏற்றி வைத்து விட்டு நீ எங்கு சென்றாயோ தம்பி!
பார் போற்றும் உத்தமனாய் என் தம்பி இருக்கிறானே என்று மகிழ்ந்தேனடா

அந்த நினைப்பு சருகாய் மண்ணில் மறைந்தனவே!
எம் மகிழ்வு கனவாகிப் போனதடா!
உலகில் எமக்கிருந்த அந்த உறவு போனதடா!
சமாதான நீதவான் என்னும் பட்டம் பெற்றாய்!
அதை வைத்து ஊர் மக்களின் தேவையை பூர்த்தி செய்தாய்
உன் சேவை நிமிர்த்தம் பஸ் ஏறி கொழும்பு காண போய் வந்த உனக்கு

மணக் கோலம் பார்க்க சென்ற வாகனத்திலா
உன்னை விழுத்த காலன் பின்னால் வந்தான்!
எல்லோருக்கும் பாதுகாப்பாக போக கூறும் உனக்கா! இந்த நிலைமை!

நீ வீட்டில் உலாவித்திரியும் இடம் வெறிச் சோடி கிடக்குதுடா!
நாங்கள் படம் பார்த்தால் கூட நீ அறையில் இருந்து படித்துக் கொண்டிருப்பாயடா அந்த படிப்பால் வந்த பதவிகளை நீண்ட காலம் அனுபவிக்க விடாது
என்னை உனக்கு கடமை செய்ய வைத்து விட்டதோ அந்த விதி!

அன்பான மைத்துனரே பவா நான் புகுந்த வீட்டின் பொக்கிஸமாக உன்னை கண்டு பெருமை கொண்டேன்!
ஆற்றல் மிக்க திறமை சாலியும் ஆண்மீக வாதியாகவும்
உன்னை கண்டேன் மகிழ்ச்சி அடைந்தேன்!

உன் மரணம் கண்டேன் துடித்தேன் பதறினேன்!
நீ வாழும் போதும் புகழ் கண்டாய் உன் மரணத்திலும் புகழ் கொண்டாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ எங்கள் வீட்டு வானத்து வெண்ணிலாவே நீ இன்று மறைந்தாயே!
எங்கள் வீடே இருள் சூழ்ந்து போனதுவே நீ இருந்த இடமெல்லாம் வெறுமையாகி விட்டதுவோ! உன் அன்பான திருவுருவத்தை இனி எப்போ காண்பேனோ!
உனக்கு எல்லாச் சிறப்பையும் தந்த அம்பாள் உன் ஆயுளை மட்டும் ஏன் முடித்தாவோ!
உன் பெருமைகளை சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை நீ ஒரு மேதையடா!

தவராசா குடும்பம் (அண்ணா ,அண்ணி)

## நேச மருமகனின் ஏக்கம்...!

என் நினைவில் வாழ்ந்துகொண்டிருக்கும்...
என் மனதில் நிறைந்திருக்கும்...
என் அன்பு ஆசை மாமா...
பவா மாமா...
நீங்கள் எங்கு சென்றீர்...?
நீங்கள் சொன் ஒவ்வொரு வார்த்தையும்
என் மனதில் பதிந்தன...
உமது ஞாபகம் எனது மனதில் என்றும்
நிலைத்திருக்கும்
உம்மை எப்போது காணுவோம்...?

அன்பு மருமகன்
றமணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருயிர் சகோதரியின் தவிப்பு...

பிறந்த மண்ணை விட்டகல முடியாத உம் உள்ளம்
பிறந்த பந்த பாச மெல்லாம் விட்டகலத் துணிந்தது ஏனோ!
சொந்த பந்தத்தை துடிக்க விட்டு எங்கு சென்றாய் மைத்துனனே!!
எனக்கு தோழனாய் வந்த மைத்துனனே
கள்ளம் கபடம் இல்லாது நேர்மையுடன் இருந்தாய்
உனது நேர்மைக்கும் நியாயத்திற்கும் குந்தகம் விழைந்ததாலோ!
ஊரெங்கும் கொடிய இருள் சூழ ஊர்கோலம் போகும்

நாளை வரவழைத்தாயோ மைத்துனனே!!
வேளாதோப்பு அம்மனை தினம் தோறும் தொழுபவனே!
எம் ஊரை வளர்ப்பதற்கு காலை மாலை உழைத்தவனே
உன் பணி முடிந்ததென்றா விரைந்தனை விண்ணுலகு
எம்முடன் இருந்து எங்கள் கடமைகளை செய்வாய் என்று நாம் இருக்க
எங்களின் முன் எங்களை உன் கடமைகளை செய்ய விட்டு
மாயமாய் எங்கு சென்றாய் சகோதரனே!!
உத்தமன் என்று பார் போற்ற நல்லவனாய் வாழ்ந்த சகோதரனே!
அச் சொல்லை நீண்ட காலம் காபபாற்ற முடியாமல் திடீரென!!
நீயும் இவ்வுலகை துறந்ததினால். துயர் அடைகின்றோம் இன்று.
என்னருமை சகோதரனே எங்கள் குடும்பங்களுக்கு.
ஆறுதல்கூறி காக்கும் தூணாய் இருந்தாயே!
என் பிள்ளையை படிக்க வைத்து பார்க்க வேண்டும் என்றுகனவு கண்டாயே!
அக்கனவினை நிறைவேற்றி பார்க்கும் முன்!
எம் தெய்வத்தின் வாழ்வு முடிவானது ஏனோ!!

விபத்து நடக்கும் போது உன்னருகில்
இல்லாத பாவியாகி விட்டோம் மாமா!
நீங்கள் கற்பூரமாய் மாறிவிட்டீர்கள் மாழ்கின்றோம் இங்கு நாம்
இத்துயர் யுகம் போயும் மாறாது மாமா!!

காலன் வந்து உம்மை கவர்ந்து கொண்டு போனானோ!
நீர் பூவுலகை துறந்து விண்ணுலகு சென்றீரோ
ஏதும் தெரியவில்லை எமக்கெதுவும் புரியவில்லை!
தீது நிகழ்ந்ததென்று திணறியே புலம்புகிறோம் ஒன்றும் அறியோம் அம்மா!!
யாரும் எமக்கில்லை அம்மா
யாவுமாய் நீயிருந்து நல்லவழி காட்ட வேண்டும் தாயே.

இராமஜெயம் லோகநாயகி குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் உருவமே பவா...

வீட்டிற்கு கடைக்குட்டியாக வந்த என்சசோதரனே!
நீ கடைக்குட்டியாக இருந்தாலும் வீட்டில் எல்லாப்
பொறுப்பையும் ஏற்று நின்றாயே
திக்கற்று நின்ற போதும் என்னையும்
என் பிள்ளைகளையும்
தூண் போல காத்து நின்றாய்!
பவா பவா என்று உன் நாமத்தைக் கூப்பிட்டால்
கணப்பொழுதில் ஓடிவந்து எங்கள் குறைகளைத்
தீர்ப்பாயே பவா! உனக்கேன் இந்தவிதி?
தடைகள் பல தாண்டி தடங்கள் பதித்து திடமான
மனிதனாய் பவனிவந்தாயே பவா!
எல்லோரையும் நான் பார்ப்பேன் கவலைப்படாமல் இரு
என்று! கூறுவாயே
இப்போ யாரிடம் போய் உரைப்பது?
கோயில் கோயில் என்று வேளாதோப்பு சக்தியையே
மெச்சினாய்
சடுதியிலே கண்மூடித் திறக்கமுன் சக்தி ஏன் தடுமாற
வைத்தா?
கலியாண வீட்டிற்குப்போய் மாலை வருவதாகக்
கூறினாயே
உன் வரவை எதிர்பார்த்தவேளை இடியென வந்த
செய்தி - இது
கனவா நனவா நம்பவே முடியவில்லை.
சொல்லாமல் கொள்ளாமல் சுனாமி அலை
வந்ததுபோல்
ஏன் காலன் உன்னைக் கவர்ந்தான்.
நீ மீண்டும் என் தம்பியாக வரவேண்டும்
உன் ஆன்மா சாந்தியடைய அம்பாளை
வேண்டுகின்றேன்.

உன் நினைவில்
கிளிஅக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதை விட்டகலா நினைவுகளுடன்...

என் ஆசைத்தம்பியே !
வார்த்தைகளில் உணர்த்தமுடியாத உன்
பாசப்பிடியில் சிக்கி
நாமெல்லாம் ஆற்றமுடியாத வேதனையில்
துடிக்கின்றோம்.
உன் ஒவ்வொரு சொல்லும் செயலும் - என்
இதயத்தில் பசுமரத்தாணிபோல பதிந்துள்ளது

என் உள்ளத்தை வாட்டுதடா.
அவனியிலே சத்தியத்தின் தந்தையென வாழ்ந்த நீ
நித்தியமாய் பெருவாழ்வு நாடி ஈசனடியே கதியென்று
சென்றுவிட்டாய்.

எம் உயிர் உள்ளவரை என்றும் இணைந்திருப்போம்
உன் நினைவுகளுடன்.

உடன்பிறவாத சகோதரி.
நந்தினி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர் உள்ளங்களிலிருந்து...

விழி தன்னில் பாசம் ஏந்தி உதட்டிலே
புன்னகையுடன் - எமை
கவர்ந்த எங்கள் ஆசைத் தம்பியே!
எம்மையெல்லாம் தவிக்க விட்டு விட்டு
எங்கு நீ சென்றாயடா?
கொம்பிழந்த மானாக தவிக்கின்றோம் உன்னை இழந்து
மறக்க முடியுமா உந்தன் சிரித்த முகத்தை?
எம் முகத்தில் தீராத சோகத்தை தந்து விட்டு
எங்கு நீ சென்று விட்டாய்?
தம்பி நீ என்றாலும் - இலக்குமணனாய் எமக்கிருந்து
எம்மோடு தோள் கொடுத்தாய்!
நீ இல்லாமல் தவிக்கின்றோம் நாமிங்கு
மீண்டும் வந்தியடா எங்கள் இல்லத்தில் குழந்தையாய்!

## மைத்துனர் மனங்களிலிருந்து...

மைத்துனரென்று எப்போ நாம் வந்தாலும்
நித்தமும் மாறா இன்முகத்தோடு வரவேற்று
அன்பு பரிமாறிய எங்கள் பவாக்குட்டியே!
அன்பு தவழும் முகம் ஆதரவான பேச்சு
உறவை மறக்காத ஆதரவு உரிமையை
நினைக்கும் மனசு
என எல்லா குணங்களும் நிறைந்து வாழ்ந்த
உங்களின் மனதை எப்படி மறக்க முடியும்?
நேசமாய் சிரித்துப் பேசி நிதமுமே அன்பாய் வாழ்ந்தீர்
பாசமாய் வார்த்தையாடி பரிவுடன் உறவு பேணி
நீ செய்த நன்மையெல்லாம் நிலமுளள
வரைக்கும் வாழும்
தந்தை தாய் செய்த நன்மை சொர்க்கத்தில் உன்னை
சேர்க்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் நெஞ்சங்களிலிருந்து...

அன்போடு அறிவினையும் பண்போடு
நற்பழக்கத்தினையும்
பாசத்துடன் பக்தியையும் - எமக்கு புகட்டி வாழ்வில்
நாம் உயர ஏணியாய் இருந்த எங்கள் பவா மாமாவே!
"பவா மாமா" என்று நாங்கள் மகிழ்ந்திட்ட நாட்கள்
எங்கே?
மாமாவின் பாசம் எம்மைக் காத்ததே அது இன்று
எங்கே?
வாழ்ந்திட்ட காலமெல்லாம் நாம்வாழ்ந்திட
வேண்டுமென்று
வாழ்ந்திட்ட நீங்களெங்கே? நாளெல்லாம் நாம்
புலம்புகின்றோம்!

## பெறாமக்களின் உள்ளக்குமுறல்...

பாசமிகு எங்கள் சித்தப்பாவே! பாரினிலே - எமை
தனியாக தவிக்கவிட்டு பரவுலகம் சென்றதேனோ?
அன்பால் அரவணைத்து அன்பையே தான் சொரிந்து
அன்பாகவே வாழ்ந்து விட்டு அழவைத்து சென்றீரே!
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
ஆறிடுமோ எம்துயரம் மாறிடுமோ உம் இனிய முகம்?
ஏக்கத்துடனும் பரிதவிப்புடனும் - எமை
விட்டு எங்கு சென்றீர்கள்?
உருகுகின்றது எம் மனம் உங்களை காணாது
தோன்றுவீர்களா எம் கண்ணீர் துடைப்பதற்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரர்களின் தவிப்பு...

பாலூட்டி உணவூட்டி மடியிருத்தி கதைகள் சொல்லி
அரவணைத்து மகிழ்ந்த எங்கள் பவாத்தாத்தா!
எமையெல்லாம் தவிக்க விட்டு எங்கு நீங்கள் சென்றீர்கள்?
மழலைகள் நம் மொழி கேட்டு மகிழ்ந்திருந்த எங்கள் தாத்தாவே
கட்டியணைத்து எமை முத்தமிடும்
எங்கள் தாத்தா நீங்கள் எங்கு சென்றீர்கள்?
உங்கள் முகம் காணாது தவிக்கின்றோம்
மீண்டும் வருவீர்களா எங்கள் மழலை மொழி கேட்க?

## எந்தன் உடன் பிறவா சகோதரனே!

வானம் போல் விரிந்தமனம்
வைகறைபோல் விடிந்த முகம்
தேனைப்போல் சொற்பேச்சு
சென்றதெங்கே என் சோதரனே !

காலம் கனிந்துவரும்
கனிவான பொழுதினிலே
காலனிடம் நீ செல்ல
காரணமேன் மைத்துனனே!

பாசமும் நேசமும் கொண்ட
பவாசித்தப்பாவே உங்கள்
வாசம் குன்றாத முகம் வாடியதே
வாழ்நாள் சோகத்தில் மூழ்கியதே !

உங்கள் அத்மா சாந்தியடைய
அன்னை வேளாதோப்பாளை
அடிபணிந்து வணங்குகின்றோம்.

உடன் பிறவா அண்ணா
சிவானந்தமூர்த்தி குடும்பத்தினர்
பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பிறவா சகோதரியின் உள்ளக் குமுறல்...

ஒரு கூண்டுக்கிளிகளாக இருந்த எம்மில்
சிறகொடிந்த பறவையாக உம்மை அழைத்தானோ காலனவன்?
அளவான பேச்சு ஆனால் அத்தனையும் அர்த்தம் நிறைந்தவை.
"எமக்கு பவா இருக்கிறான் எல்லாவற்றையும் பார்ப்பான்" என்று தானே நாமிருந்தோம். இத்தனை உறவுகள் இருந்தும் யாரும் காணாது வீதியிலே விழுத்தியது விதியின் சதியோ?
எல்லாவற்றுக்கும் மௌனமாய் இருந்து
தடைகளை உடைத்தாய் - இறுதியில்
மரணத்திலும் மௌனமாய் போக நினைத்தாயோ?
வேளா தோப்பு சக்தியை மெச்சினாயே
அம்மனுக்கு ஏன் இந்த அவசரம்?
எங்கள் பாசத்தின் உறைவிடத்தை
எம்மிடம் இருந்து பிரித்து விட்டார்.
உன்னைப் போல் ஒரு உத்தமனை நாம்
எங்கு போய் தேடுவது?
உங்களை இழந்து தவிக்கின்றோம் நாம்!
மீண்டும் வந்துதித்திடுவீர் - எங்கள்
வேளாதோப்பு மண்ணில் குழந்தையாக!
உங்கள் நினைவுகளுடன் என்றும் நாம்......

விஜயசேகரம், கௌரியம்மா, அபர்ணா,
சுவீடன் குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூவும் குரல் கேட்கிறதா பவா மாமா?

கூப்பிடும் குரல் கேட்கவில்லையா?
"பவா மாமா" என பாசமுடன் நாமழைக்க
அன்பாய் எம்மை அரவணைத்தீர்கள் மாமா
தந்தையாய் தாயாய் தாய் மாமனாய் இருந்து
தரணியில் நாம் வாழ நல்வழி காட்டினீர்கள்!

சேயாய் எமை அணைத்து தெரியாத அறிவுரைகள்
செப்பமாய் புகன்றீர்கள் பவா மாமா
தந்தை அற்ற குறை தீர்த்தீர்கள் மாமா
அவையகத்தே சென்று அனைவரிலும்
முன்னிற்க வேண்டும் என தளராத துணிவோடு
எமை வழிநடத்தினீர்கள் மாமா!

சிட்டுக்களாய் நாம் சிறகடித்துப் பறக்க
சினக்காமல் எமை வழிநடத்தினீர்கள்
என் இல்வாழ்வு இணையற்று மிளிர
பிரான்ஸ் நாட்டை தேர்ந்தெடுத்தீர்கள் மாமா
ஆகாய வெளியில் ஆசையுடன் நாம் பயணிக்க
அன்புடன் வழியனுப்பி வைத்தீர்கள் மாமா
சற்றும் நினைக்கவில்லை அதுவே உங்கள்
திருவதனம் காணும் கடைசி தருணம் என

இம்சைகள் பல தந்த போதும்
இன்பமாக ஏற்றீர்கள் மாமா - இன்று
இதயம் கனத்த வேதனை தந்து
இடிந்து போக செய்தீர்கள் மாமா!

பாயில் கிடவாமல் நோயில் சிக்காமல்
நொந்து மனம் வாடாமல் சோகத்தை
தந்து விட்டு சொல்லாமல் சென்றீர்களே மாமா
பாதி வழியில் நீங்கள் சென்றதால்
நீரில்லா மீன் போல துடிக்கின்றேன் மாமா!

ஊரெல்லாம் போற்ற நல்லவராய் வாழ்ந்த
உங்கள் பெயர் மங்கிவிட்டது மாமா
உங்கள் பிரிவால் உலையிட்ட மெழுகாக
உண்மையில் துடிக்கின்றேன் மாமா!

மக்களாய் எங்களை மனதினில் சுமந்தீர்கள்
முத்துக்களாய் எம்மை முதுகினில் சுமந்தீர்கள்
முத்தியை அடைய முந்தி தான் விட்டீர்கள்
தவிக்கின்றோம் மாமா உங்கள் தயவின்றி
தரணியில் நீங்கள் தாமதிக்காததன் காரணம் தான் என்ன மாமா?
இறுதியில் உங்கள் திருவதனம் கூட கிடைக்கவில்லையே மாமா
மாயமாய் மறைந்து விட்டீர்கள்!
மலைத்து விட்டோம் நாம்!
தொட்ட நெஞ்சம் துவண்டு போக
தூர தேசத்தில் இருந்து தேம்பி அழுகின்றேன் மாமா
மனதை தைக்கும் நினைவுகள் மீள
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை பிரார்த்திக்கின்றேன்!

மருமகள்: தாரணி, ராஜா,அக்சனா, அக்ஸ்வின்
பிரான்ஸ் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவால் துயரடையும் மருமகள்...

நெஞ்சில் நிறைந்த மாமா!
எங்கள் மாமா என்று சொல்லி அழைக்கும்
இனிய குரல் எங்கே
தாய்க்குத் தாயாய் தகப்பனுக்கு தகப்பனாய்
துலாக்கோல் போல் வழி நடத்திய பவா மாமா!!
எனக்கு சின்ன வயதில் புத்திமதிகள்
கூறி பாடங்கள் புகட்டினீர்கள் மாமா!!

கண்களைப் போல என்றும் எங்களை கார்த்தீர்களே பவா மாமா
இவ்வுலகில் ஒளி ஜோதியாய் இருந்து எமக்கு வழி காட்டினீர்களே மாமா!!!
நெற்றிவியர்வை கூட சிந்தாமலே எமக்காக உழைத்த கரங்கள்

சின்ன வயதில் உடம்பாலும் மனதாலும் சினக்காமல்
எங்களை நல் வழி காட்டிய என் தெய்வம்
எனக்கு நல் வழி கிடைக்க வேண்டும் என்று
என்னை இந்தியா அனுப்பிவிட்டு
வருகிறேன் கஸ்தூரி என்று சொன்னிர்களே மாமா!
ஆனால் உங்கள் முகத்தை இக்கோலத்தில் பார்பதற்காகவோ!!

ஓடோடி வந்தேன்.
விதிசெய்த விளையாட்டு
நீங்கள் வணங்கிய அம்மனின் திருப்பாதத்தில் சேர்ந்து விட்டிர்களோ மாமா!

நானும் கடவுளை வேண்டுகின்றேன்
உங்கள் ஆத்மா சாந்நி அடைய...

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மருமகள் கஸ்தூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை விட்டு எங்கு சென்றீர்கள் மாமா?

மாமா எங்கள் உள்ளக் கடலில் உங்கள் நினைவுகள் என்றும் அலையாய் அடித்து கொண்டிருக்கின்றன. அந்த பிரியமான பவாமாமா இல்லை என்று நினைக்கும் போது நெஞ்சு வலிக்குது மாமா. ஈழம் வந்து எங்கள் பிரியமான மாமாவை பார்த்து பல கதைகள் பேச வேண்டும் என எண்ணியிருந்தேன்!

அதற்குள் எனது எண்ணத்தை சுக்குநூறாக்கி விடடீர்களே மாமா! சிறு வயதில் நான் செய்யும் தவறுகளை பார்வையால் கண்டித்து வளர்த்த மாமா!! விண்ணுலகம் போனது ஏனோ தெரியவில்லை. இந்தியா வாங்கோ என்று கூப்பிட்ட நேரத்தில் வரவேண்டிய நேரம் வருவேன் என்று கூறியமாமாவே இனி எங்கே வரப்போகிறீர்கள்! என்று நினைக்கும் போது நெஞ்சம் பொறுக்குதில்லையே மாமா! விபத்தில் சிக்கிய செய்தி கேட்டு மனம் கலங்கி நின்றேன்.

தொலை பேசியில் இருந்து வரும் செய்திகளை கேட்டு சுகப்பட்டு வருகிறார் என்றல்லவா நம்பி இருந்தேன். அந்த நம்பிக்கையை ஏமாத்தி விட்டீர்களே மாமா!! எங்கள் பவாமாமாவை பார்க்க முடியாதளவிற்கு நீங்கள் வணங்கிய ஆத்தாள் தன்னுடன் சேர்த்துக் கொண்டாவோ. கடைசி நேர உங்கள் பயணத்தை பார்க்கக்கூட முடியாத பாவியாகி விட்டேன் மாமா!!

நீங்கள் நம்பிக்கை வைத்த ஆத்தாளின் பாதத்தில் நிம்மதியாக இருபீர்கள் என்ற நம்பிக்கை தான் எமக்கு ஆறுதலாக உள்ளது.

மருமகன் குடும்பம் கண்ணன், லதா, விபுல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாத் துயரத்தில் மருமகன்...

பவாமாமா! பவாமாமா!! என்று நாவினிக்க
அழைத்தேனே
யானினி பவா மாமா என யாரை அழைப்பேன்
அன்பாக என்னை தூக்கி வளர்த்து நல்ல
அறிவுரைகளை கூறுவீரகளே மாமா!!!

தாய்க்குத் தாயாய் தந்தைக்குத் தந்தையாய்
இருந்து எனக்கு பாடங்கள்
சொல்லித் தந்தீரே மாமா!
நான் பிழைகள் தவறுகள் செய்தால் என்னை
கண்டித்து நல்ல புத்திமதிகள் கூறுவீரகளே மாமா!!

இனி என்னை கண்டித்து நல்வழி காட்டுவதற்கு
நீங்கள் இல்லையே நான் என் செய்வேன்
போதும் இனி காணும்மென மண்ணுலகை விட்டு
விண்ணுலகம் போனீரோ யானிங்கு தவிக்கிறேன் மாமா!

தொலைபேசியில் மயூரர் என பாசத்தோடு அழைப்பிரே
இனி அந்த குரலை எப்போது கேட்பேன்
அன்று போகும் போது சொன்னிர்களே மாமா!

நான் வேளாதோப்பு அம்மன் கோயிலுக்கு
வேலையாக போகனும் நான் வருவன் - என்று
சொல்லி விட்டு சென்றீரகளே மாமா!
அம்மன் நினைத்தது வேறொன்றோ மாமா!!
உமக்கு நடந்த விபத்தை கேட்டதும்
நான் ஒரு கனம் என்ன செய்வதென்று தெரியவில்லை.
நான்கு நாட்கள் நீங்கள் பட்டவேதனை
நான் இன்னும் அனுபவிக்கவில்லை.
ஆனாலும் நீங்கள் பட்ட வேதனையை
நான் உணர்கின்றேன் மாமா!

அன்புள்ள பவா மாமா உமைப் போல் இந்த
அகிலமதில் யாருமில்லை நம் துன்பங்கள் அகற்றி
நமக்கு துணையாயிருந்தீரே எங்கு சென்றீர் எனை விட்டு
ஏங்குகின்றேன் போனதெங்கே.
வேளாதோப்பு அம்மன் அடி சென்றீரோ!
உமது ஆத்மா சாந்தியடைய நான் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உயிர் மருமகன் - சாயிராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கென வாழ்ந்த எங்கள் பவா மாமா!

தொலை தூரம் வாழ்ந்தாலும்
தொலை பேசி வழியாக
ஜெகன் என்றழைப்பீரே!
ஆனால் இன்று
என் மனவானில் ஓர் நட்சத்திரம் விழுந்ததேனோ!!

என் சோலையில் ஒரு குயில் கண் காணா இடத்துக்கு பறந்ததேனோ!!!
என்மன மலர் தோட்டத்தில் ஒரு மலர் உதிர்ந்து விட்டதேனோ
தனக்கென வாழ்ந்து பழக்கமில்லா ஓர் இதயம்
துடிக்க மறந்து விட்டதேனோ!

தாண்ட முடியாத அன்பு வேலியை தாண்டி சென்றதேனோ
காலன் உம்மை கவர்ந்ததேனோ
இந்த முடிவை நீர் விரும்பாவிட்டாலும்
முடிவு உங்களை விரும்பிவிட்டதே!!

சொர்க்கத்தில் நீர் இருந்து வழி காட்டுவீர் எனக்கு
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
வேளாதோப்பு அம்மனை வேண்டுகின்றேன்
உங்கள் கனவு மெய்ப்படும்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மருமகன் (ஜெகன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளமதில் உறைத்து விட்ட உத்தமர் எங்கள் பவா மாமா...

அன்பு பாசம் பொறுமைக்கு இலக்கணமாய்த் -திகழ்ந்த
எங்கள் பவா மாமா!
ஊன் தனை உருக்கி எமக்காக வாழ்ந்தீர்கள்

"பவா மாமா" என கூப்பிட்ட உடனே
பாசத்துடன் எம்மை நாடி வந்து பணிவிடை செய்தீரே!
ஐயிரண்டு நாட்களுக்கு முன் எம் புதுமனைக்கு வந்து
விளக்கேற்றி வைத்தீர்கள் - இன்று
நாம் உமக்கு நெய்ப்பந்தம் பிடிக்க வைத்து விட்டீரே!
கடமை கண்ணியத்துடன் பணி செய்தீர்கள்!
வேளா தோப்பு அம்மனின் திருப்பணிக்கு திருப்தியாய்
உங்களை அர்ப்பணித்தீர்கள்!
வற்றாத கல்வியினை விருப்புடன் - கற்று
பட்டங்கள் பதவிகள் பெற்றீர்கள்.
யாருக்கும் மறுப்புத் தெரிவிக்காது - எல்லோருக்கும்
உதவிக் கரம் நீட்டிடும் உத்தமன் உங்களுக்கு
கைகொடுக்க அந்த கணப்பொழுதில் யாரும்
வரவில்லையோ?
மணக்கோலம் காணப்போய் பிணக்கோலமாய் வீடு
வந்தீரோ?
காலனுக்கு உங்கள் மீது ஏன் இந்த அவசரமோ?
ஏற்க முடியவில்லை எம்மால்.
எங்கள் ஆலமரம் சாய்ந்ததால் விழுதுகள் நாம்
வேரூன்ற முடியாமல் தவிக்கின்றோம்.
காலனவன் உம் உறவை பாதி வழியில் பறித்து
விட்டான் ஆனால்
எம் உள்ளங்களிலிருந்து உம் நினைவை பறிக்க
முடியாது.
எம் உள்ளமதில் உறைந்து விட்ட உத்தமரே!
உங்கள் நினைவுகளுடன் உங்கள் வழியினிலே
என்றும் நாம்!

மருமக்கள்
ரூபன், மீரா, பிரியா, சிறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கு கானல் நீராயிற்று...

நீர் எம்மோடு இணைந்து ஒரு வருடங்கள் தான் உம்மோடு பழகிய அந்த நாட்களை எம்மால் ஜீரணிக்க முடியாதுள்ளது. உதட்டில் ஒரு புண்ணகை அது பல அர்த்தங்கள் நிறைந்தது. கம்பீரமான பேச்சு அடக்கமான சுபாவம் அதுதான் உமது கொடை. எங்கள் துறையின் தேவையறிந்து எம்முடன் எல்லாம் கலந்து பேசி அவற்றை எல்லாம் நிறைவேற்றி வைத்தாய். உம்மிடத்தில் இறை நம்பிக்கையும் ஆன்மீக ஈடேற்றமும், சமுகத்தொண்டும் நிறையவே காணப்பட்டன. அவற்றையெல்லாம் கடமை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் நிறைவேற்றிவைத்தாய். எமது உடற்கூற்றியற் துறைக்கு நியமனம் பெற்று வந்தது எங்களுக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதமாக இருந்தது. அண்மையில் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஒரு பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டு வந்த பிறகு எங்கள் துறையில் அந்த பயிற்சியின் பெறுமதியை நிறைவேற்றுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கையில் அந்தக்கொடிய காலன் ஒரு நொடி நேரத்தில் உன்னைக் கவர்ந்து கொண்டு சென்று விட்டான். நீர் எம்மை எல்லாம் பிரிந்து ஒருமாதம் தான், ஆனால் உன் நாமத்தை எம்துறையிலுள்ளோர் அடிக்கடி "நந்தீஸ்" எனறு பிரயோகிக்கின்றார்கள். ஏன் என்றால் உமது தொழில்நுட்பம் எமக்கெல்லாம் ஒரு உசாத்துணையாக இருக்கின்ற படியால்.
இறுதியாக உமது இழப்பால் துயருற்றுக்கொண்டு இருக்கும் உமது உறவுகளுக்கு எமது ஆழந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொண்டு அவர்கள் ஆறுதல் பெற இறை ஆசி வேண்டுகின்றோம்.

திரு செல்லையா குணராஜா
தொழில் நுட்ப உத்தியோகத்தர்
உடற்கூற்றியற்துறை மருத்துவ பீடம்
யாழ் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த கடமையாளன் நந்தீஸ்வரன்...

கடமையிலும் பொதுச் சேவையிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்ட திரு மயில்வாகனம் நந்தீஸ்வரன் அவர்கள் எமது உடற்கூற்றியற் துறையில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடந்த ஒருவருடமாக மிகுந்த வினைத்திறமையுடன் கடமையாற்றியவர். மின்னியல் உபகரணங்களில் மிகுந்த பரீட்சயம் கொண்டவராக திகழ்ந்தவர்.

எமது துறைக்கு தேவையான உபகரணங்களை சிறந்த முறையில் தெரிவு செய்யவேண்டுமென்ற ஆர்வத்தில் தனது சொந்த வாகனத்திலேயே ஓடித்திரிந்து அதில் வெற்றியும் கண்ட ஒருவர். அண்மையில் கொழும்பு சென்று மேலும் தொழில்நுட்ப பயிற்சிகளைப் பெற்று தனது தொழில் தகமைகளை விருத்தி செய்து கொண்டது மட்டுமல்லாது அதனை சிறப்பாகபிரயோகித்து தனது துறையில் முன்னேற்றப்படிகளில் கால்பதித்து எமது துறைக்கு கிடைத்த ஒரு வல்லுனர் என எமது மனங்களில் நம்பிக்கையை பதித்தவர்.

சாந்தமான சுபாவமும் ஒப்பற்ற தொழிற் தகமையும் சேவை மனப்பாங்கும் கொண்ட அன்னாரின் திடீர் இழப்பு எமது உடற்கூற்றியற்துறைக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். எனினும் மண்ணிற் பிறந்தவர் அனைவரும் மறைவது திண்ணம் என்பதற்கிணங்க அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அன்னாரின் இழப்பால் துயருறும் அனைத்து உள்ளங்களும் அமைதிபெறவும் இறைவனை பிரார்த்திப்போமாக.

டாக்டர் திருமதி சிவநந்தினி உதயகுமார்
தலைவர், உடற்கூற்றியற்துறை, மருத்துவபீடம்
யாழ் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருயிர் நண்பன் பவாவே!

என் ஆருயிர் நண்பன் பவாவே நீ எங்கு சென்றாய். காற்றினிலே வந்த உனது விபத்துச்செய்தியைக் கேள்விப்பட்டவுடன் இடிவிழுந்தாற் போல அதிர்ந்து போனேன். உன்னை நேரில் பார்க்கவேண்டுமென்று யாழ் போதனா வைத்தியசாலைக்கு ஓடோடி வந்தேன். உனது கண்கள் மூடிய நிலையில் நீ சுயநினைவு இல்லாத நிலையில் இருந்ததை பார்த்து என் மனம் கதிகலங்கிவிட்டதடா. உனக்கு இப்படி ஒரு நிலைமை வருமென கனவிலும் நான் நினைக்கவில்லை. நீ மறைந்து விட்டாய் என்ற செய்தி கேட்டு ஒரு கணம் எனது நெஞ்சு விறைத்தது. எந்தநேரமும் எங்கள் வேளாதோபபு அம்மனுக்கு தொண்டுசெய்த செயல்வீரனை இழந்துவிட்டோமே. இனியார் உன்னைப்போல எங்கள் அம்மாளுக்கு தொண்டுசெய்ய உள்ளார்கள். அம்மாள் உன்மேல் கொண்ட விருப்பால் உன்னை தன்னிடமே எடுத்துவிட்டார். எந்தநேரமும் அம்மன் கோவிலையே சுற்றிவருவாயே. லீவு கிடைக்கும் போதெல்லாம் இரவு பகல் பாராமல் ஆலய முன்னேற்றத்திற்கு அயராது பாடுபட்டாயே. பரந்தாமா என்று பெயர்சொல்லிக்கொண்டு அடிக்கடி வீடு வரும் என் நண்பன் பவாவே உன் இழப்பை நினைத்து உள்ளம் வேகுதய்யா. நான் யாரிடம் சொல்லி அழுவது. அம்பாளுக்கு ஒரு வசந்த மண்டபம் கட்டவேண்டும். வாகனங்கள் செய்யவேண்டும். அருகிலிருக்கும் குளத்தை புனரமைத்து மெருகூட்ட வேண்டும். இவ்வாறு நீ கண்ட கனவுகள் எத்தனை. அவற்றை நனவாக்கும் முயற்சியில் நீ களம் கண்ட நேரம் உனக்கு இந்த நிலை நேர்ந்ததே. உன் திட்டங்களை நிறைவேற்றி என் கனவுகளை நனவாக்குவோம். நீ விட்டுச்சென்றவற்றை நாம் என்றும் தொட்டுச்செல்லுவோம். உன் கனவுகள் யாவற்றையும் நனவாக்கிக் காட்டுவோம். சென்ற வருடம் அம்பாளுக்கு அன்பர் ஒருவரின் உதவியைப் பெற்று கொடித்தம்பம் செய்வித்து கோயிற்திருவிழாவை முன்னின்று நடாத்திய உத்தமனே உன் பிரிவை நினைக்கையில் உள்ளம் குமுறுதடா. முல்லைத்தீவில் உறவினரின் திருமண வீட்டிற்கு போய் மணமக்களை வாழ்த்தி வீடுதிரும்பும் வழியில் உனக்கு இப்படி ஒரு கதி நேர்ந்ததே. உனது உயிரைக் காப்பாற்ற வைத்தியர்கள் எவ்வளவோ போராடியும் பொல்லாத காலனவன் வென்றுவிட்டானேயடா. அம்மாளாட்சி உனக்கு மோட்சம் கொடுத்துவிட்டாவடா. உனதுகுரல் கோயிலெங்கும் ஒலித்துக்கொண்டேயிருக்குதடா. உன் ஆத்மா சாந்தியடையட்டும். வேளாதோப்பு ஸ்ரீமுத்துமாரி அம்மாளாட்சியே எங்களுக்கு ஆறுதல் தாராயோ. உனது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது உற்றதோழன் அமரர் நந்தீஸ்வரனுக்கு எனது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றேன்.

"ஓம் சாந்தி சாந்தி சாந்தி"

வேளாதோப்பு ஆலய பரிபாலன சபை சார்பாக
உபதலைவர் இ.பரந்தாமர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த சேவையாளன் நந்தீஸ்...

அமரர் மயில்வாகனம் நந்தீஸ்வரன் அவர்கள் சிறந்த ஆன்மீகவாதியாகவும், சமூக சேவையாளராகவும் தனது தொழிலில் அர்ப்பணிப்பு மிக்கவராகவும் விளங்கியவர். வேலைநேரம் தவிர்ந்த ஏனைய மிகுதிக்காலம் முழுவதும் சமூக அமைப்புக்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் இருபாலை வேளாதோப்பு ஸ்ரீ மதுரை மகா முத்துமாரி அம்மன் கோவில் தலைவராக இருந்து ஆலயத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியவர். அத்துடன் கிராம அபிவிருத்தி சங்கத்தலைவராகவிருந்து பொதுமக்களுக்கு பல நன்மைகள் செய்துவந்தார்.

அகில இலங்கை சமாதான நீதவான் பதவியைப் பெற்று அதனூடாகத் தான் வாழ்ந்த கிராம மக்களுக்கு தேவைகளை நிறைவேற்ற உறுதிப்படுத்தல்களை மேற்கொண்டு அவர்களின் முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்தவர். நான் இப்பிரிவிற்கு கடமையேற்று வந்தபோது எனக்கு முன்னரே அறிமுகமான சிலரில் இவரும் ஒருவராக இருந்தார். என்னுடைய வேலைகளை இலகுவாக மேற்கொள்வதற்கு ஆலோசனைகளை வழங்கி பொறுப்புக்கள் பலவற்றை ஒழுங்குபடுத்தி சிறந்தமுறையில் அவற்றை நடாத்திமுடிக்க முன்னின்று செயற்பட்டார்.

திடீரென ஏற்பட்ட விபத்தின் மூலம் எங்களை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்துவிட்டார். நீண்டநாள் எம்முடன் இணைந்து கிராமத்தின் முன்னேற்றத்திற்கு மேலும் உறுதுணையாக இருப்பார் என நாம் எண்ணியிருந்த வேளையில் எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்து சென்றுவிட்டார். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய அவரது குலதெய்வமான இருபாலை வேளாதோப்பு ஸ்ரீ முத்துமாரி அம்மனை வேண்டி குடும்பத்தவர்களுக்கு எனது ஆழ்ந்த் அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கினறேன்.

"ஓம் சாந்தி சாந்தி சாந்தி"

சி.உதயகுமார்
கிராம அலுவலர் J/257
இருபாலை தெற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிராம அபிவிருத்திச் சங்க செயற்பாட்டில் உரையாற்றும் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி மதியை வென்று விட்டது...

வாழவேண்டிய வயதில் எம்மை எல்லாம் பரிதவிக்க விட்டு சென்று விட்டார் அமரர் மயில்வாகனம் நந்தீஸ்வரன். சுமைகள் பலவற்றை சுமந்தவர் ஆலயம் கிராமம் மக்கள் என்று உலாவந்தவர். இன்று எல்லோரையும் கதி கலங்க வைத்து விட்டுச் சென்று விட்டார். சில ஆண்டுகளுக்கு முன் இருபாலை தெற்கில் ஓர் பொது மண்டபம் அமைப்பதற்கு என்னோடு இடது கரமாக நின்று உழைத்தார்.

இன்று கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவராக இருந்து பல வேலைத் திட்டங்களை முன்னேடுத்திருந்தார். அது மட்டுமல்ல பல ஆண்டுகளுக்கு முன் எமது கிராமத்தில் பிரசித்தி பெற்று விளங்கிய வேளாதோப்பு அம்பாள் ஆலயம் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட இடர்பாடுகளுக்கு மத்தியில் பல சிக்கல்களையும் சந்தித்து இருந்த ஆலயத்தை மீண்டும் புனரமைத்து கொடித்தம்பம் வைத்து மகோற்சவம் நடைபெறும் அளவிற்கு ஆக்கிவைத்தார். அது மட்டுமல்ல இன்று வேளாதோப்பு ஆலயத்தை சிறப்புறஅமைப்பதற்கு பல திட்டங்களை வகுத்திருந்தார்.

பாதி வழியில் எல்லாவற்றையும் கைவிட்டுச் சென்று விட்டார். அவர் செய்து வந்த சேவைகள் தேவைகள் முன்னெடுத்து செய்யப்படவேண்டியவை. வளர்ச்சிக்கப்பட வேண்டியவை. இதுவே நாம் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய முன்னெடுக்கப்பட வேண்டியவையாகும்

சின்னத்துரை இலட்சுமிகாந்தன்
ஆய்வு நிலை கிராம அலுவலர்
முன்னாள் தலைவர்
இன்னாள் பொருளாளர்
இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேளாதோப்பில் உம் நினைவு அழியாது என்றும்...

வேளாதோப்பிற்கு முகவரி தந்தீர்
எமக்கெல்லாம் சிகரமாய் நின்றீர்
நீர் பார்த்து பார்த்து கட்டிய தூண்கள்
கண்ணீர் சொரிகின்றன! கட்டடங்கள் அனாதியாய் கிடக்கின்றன!
எம்மைவிட கோயில் மீது அக்கறை கொண்டீர்.
எம் கோயிலுக்கு மட்டுமல்ல வேளாதோப்பின் தலைவனாய் தீகழ்ந்தீர்!
நீர் இருப்பதால் எம் பொறுப்பு எம்மை சாரவில்லை
நீரே முழுதாய் செய்து வந்தீர்
காலமது கடுகதியில் வந்ததுவோ உமக்கு

அச் செய்தி அறிந்ததுமே எமக்கு
தலை வெடித்தது போல் ஆயிற்று
உம்மைப்போல் ஒரு தலைவனை
உம் குணம்கொண்ட ஒரு மாண்புமிகு
மனிதனை எங்கு காண்போம்
தவிப்பதில் உயிறற்ற உடலாய்
உணர்கின்றோம் இன்று!

உம் ஆத்மா சாந்தியடைய வேளாதோப்பு அம்பாளை வேண்டி துதிக்கின்றோம்.
என்றும் உம் நினைவுடன் ஏங்கி தவிக்கும்.

ஓம் சாந்தி! சாந்த!! சாந்தி!!!

இருபாலை வேளாதோப்பு
மதுரை மகா முத்துமாரியம்பாள் தேவஸ்தான
பரிபாலன சபையினனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எம் நினைவில் நிற்பார்...

நெஞ்சை நெகிழ வைத்த, சேவைக்காக அர்ப்பணிப்போடு பயணித்த, மனிதத்தின் நேசன், தனது என்பைக் கூட பிறருக்கு மகிழ்ந்து கொடுக்கக்கூடிய அன்பன் நந்தீஸ்வரன் அவர்களுக்கான தனது நினைவு மடலை துயர் சுமந்த இதயத்துடன் "சித்தம்" எழுதுகின்றது.

எத்தனையோ வாழ்த்து மடல்களை அவருக்காக எழுதவேண்டிய நேரத்திலே நந்தீஸ் அவர்களின் இழப்பிற்காக விழிநீா் சிந்தி இதனை எழுதவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டமைக்கு விதி சதி செய்ததாகவே உணர்கின்றோம்.

திரு. நந்தீஸ்வரன் அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்திலே தன்னை இணைத்து, சேவையிலே அமைதியாகவும், ஆணித்தரமாகவும் மிளிர்ந்தார். தனது விசுவாசமான அர்ப்பணிப்புடன் கூடிய சேவையினால் யாழ். பல்கலைக்கழகத்திலும் அதன் ஒரு பிரிவான சித்தமருத்துவத் துறையிலும் தனது திறமையின் சுவடுகளை மிக ஆழமாகப் பதித்துத் தனக்கென ஒரு தனியான இடத்தையும் சுவீகரித்துக் கொண்டார்.

தனது பல்கலைக்கழக சேவைக்காலத்திலே தனக்குரிய கடமைகளைக் களங்கம் எதுவுமின்றிச் செய்ததுடன் கூடவே தனது தகைமைகளையும் வளர்த்துக்கொண்டார். யாழ். பல்கலைக்கழகத்தாலே நடாத்தப்பட்ட தொழிலாளர் கல்வி நெறியைப் பயின்று அதிலே சித்தியடைந்தார். அக்கல்வியூடாகத் தனது பட்டப்படிப்பை மேற்கொள்ள வாய்ப்புகளிற்காகக் காத்திருந்தார். அத்துடன் யோகாசனம், தியானம் என்பவற்றிலே தேர்ச்சி பெற்ற நந்தீஸ்வரன் தனது தொழில்நுட்ப அறிவு விருத்தியிலும் கண்ணுங் கருத்துமாக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தனது சலிப்பற்ற முயற்சியினால் தொழில்நுட்ப உத்தியோகத்தராக பதவியுயர்வு பெற்றுக்கொண்டதுடன் சமூக சேவைகள் பலவற்றிலும் தன்னை ஈடுபடுத்தினார். அதன் வெகுமதியாக வெளிநாட்டுப் பயிற்சிகளையும் மேற்கொண்டார்.**

**எல்லோரையும் உள்ளத்தால் நேசித்த அவர் மேலும் பல்லாண்டு** வாழ்வார், எல்லோருக்கும் உதவுவார் என எண்ணியிருந்தோம். ஆனால் நாம் நினைத்தது நடக்கவில்லை.

பெற்றவர் பார்த்திருக்க, சேர்ந்த பேறுபெற்றவர் காத்திருக்க, உற்றாரும் உறவினரும் நண்பர்களும் என்றும் உரமாக, துணையாக இருப்பார் என நினைத்திருக்க காலன் கவர்ந்துவிட்டான். யார்நினைத்தாஇதுநடக்குமென்று?

அவருடைய இறுதி நிகழ்வன்று தனிப்பட்ட பலராலும், பல அமைப்புக்களாலும் விதந்தும், வியந்தும் வெளியிடப்பட்ட ஐம்பதிற்கும் மேற்பட்ட அஞ்சலிப் பிரசுரங்கள் அவரது சேவையின் அறுவடைகளாகவும், அவரை சான்றோனாகவும், சேவையாளனாகவும் ஆவணப்படுத்துகின்றன. அத்துடன் வள்ளுவன் பார்வையிலே கூட தக்கார் தகவிலர் என்பது அவரவா எச்சத்தாற் காணப்படும். என்ற குறட்பாவிற்கமைய தனது அளப்பரிய சேவையினாலும் அதன் விளைவுகளினாலும் அவர் மேலானவராகவும், எல்லோராலும் மதிக்கப்பெற்ற தகைமையாளனாகவும் விளங்கினார். கறைபடியாத அவருடைய சேவை பல்கலைக்கழகத்தில் மட்டுமன்றி அவருடைய கிராமத்திலும், அவர் சார்ந்த பரந்த பிரதேசத்திலும் உயர்வாகப் போற்றப்படுகிறது. நந்தீஸ்வரன் என்றும் எம் நினைவில் நிற்பார். அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சித்த மருத்துவ துறை
யாழ்-பல்கலைக்கழகம் கைதடி.
12.03.2013.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் நொந்த நெஞ்சங்களி...

கண்மூடி திறக்கும் நேரம் முழுவதும்
உன் நினைவுதான் எமக்கு!
எம்மை விட வயது சிறிதாயினும்
உன் அறிவும் வயதும் திறமையும்
எம்மில் பல மடங்கு
எம் வீட்டுக்கு வருகையில் உன்
வாகன சத்தம் இன்றும் காதடி விட்டு
செல்லவில்லை!

அண்ணை அண்ணை என்று எம்மை
உன் உடன் பிறவாச் சகோதரனாய் ஏற்றாய்
சில நேரத்தில் எமக்குத் தோழனாயும்!
அறிவுரை கூறுகையில் ஆசானாயும்!
அறிவுரை கேட்கையில் மகனாயும் நின்றாய்!
நீ பொறுப்பெடுத்த ஆலயக் கட்டுமான பணிகளில்
எம்மையும் உன் குழுவில் சேர்த்தாய் நீயின்றி நாம்
அழுகின்றோம்.

நெய்யின்றி எரியும் தீ போல பிரகாசம் இன்றி
எரிகின்றோம்
நீ இல்லாத குறையுடன் உன் ஆத்மா சாந்தியடைய
வேளாதோப்பு தாயை வேண்டிநிற்கின்றோம்.

"மனம் நொந்த நெஞ்சங்களுடன்"

இ.நமச்சிவாயம் (நமசி அண்ணை)
சரவணபவான் (பவா அண்ணை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வுக்கு உதவும் சில யோகக்கலை குறிப்புக்கள்

**பத்மாசனம் :**

பத்மாசனம் ஒரு அமைதி நிலையில் பயிற்சி செய்ய வேண்டிய ஆசனம் சமமான தரையில் விரிப்பில் அமர்ந்த கால்கள் இரண்டையும் முன்பக்கம் நீட்டித் தாங்கிக் கொள்ள வேண்டும். அதன்பின் அதெ போன்று இடதுகாலை மடித்து வலது தொடையின்மீது வைக்கவேண்டும். இரு குதிக்கால்களும் அடிவயிற்றில் முட்டிய நிலையில் இருக்கவேண்டும். நன்றாக நிமிர்ந்த நிலையில் அமர்ந்தி?ருக்க வேண்டும்.

கண்கள் மூடிய நிலையில் இருக்கும்போது மனதை அடக்கிக் கொள்ள வேண்டும். மூச்சை உள் இழுத்து அமைதியாக வெளிவிட்டுக் கொள்ள வேண்டும். கைகள் இரண்டும் இரு முழங்கால்கள் மேல் விரிந்த நிலையில் உள்ளங்கைகள் வைக்கப்பட்டு எண்ணிக்கைகளை மையப்படுத்த வேண்டும்.

**பயன்கள் :**

பத்மாசனத்தின் பயனாக சுவாசப்பை நேராக அமைந்த சுவாச நடைமுறை சீர்பெறுகின்றது. முதுகு எலும்புகள் வலுப்பெறுகின்றன. நல்ல ஞாபகசக்தி அதிகரிக்கின்றது.

**சுவாங்காசனம் :**

உடலில் உள்ள அத்தனை அங்கங்களும் இந்தப் பயிற்சியின் போது அசைவு பெறுவதனால் இந்த ஆனசம் சர்வாங்காசனம் எனப்படுகின்றது. மேலே பார்த்தவாறு விரிப்பில் படுத்து வெளியிட்டவாறு கால்கள் இரண்டையும் செங்குத்தாக மேலே உயர்த்தி கைகள் இரண்டையும் தாங்கி நிற்க வேண்டும். நெஞ்சு நாடியில் முட்டத்தக்கவாறு உடம்பை உயர்த்தி “L” வடிவில் நிற்க வேண்டும். கால்ப்பாதங்களை மேலே நீட்டி 90யு இல் வைத்திருக்க வேண்டும். தோள், முழங்கைகள், தலை என்பன மட்டுமே நிலத்தில் பொறுத்திருக்கும். 15 எண்ணிக்கை வரை சுவாசம் உள்ளிழுத்து 30 எண்ணிக்கை வரை சுவாசம் வெளிவிட்டு கால்களை மடக்கி மெதுவாக முழங்கால் நெற்றியில் முட்டும் நிலைக்கு வந்து கால்களை நீட்டி பழைய நிலைக்கு வரவேண்டும்.


**பயன்கள் :**


தைறொயிட் சுரப்பி துரிதப்படுத்தும், ஞாபகசக்தி அதிகரிக்கும். கண்பார்வை சிறக்கும். தொந்தி மறையும். மலச்சிக்கல் நீங்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசன பயிற்சின் போது...














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிலுள்ள பெங்களூரில் யோகாசனப் பயிற்சியில் ஈடுபட்டபோது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சலபாசனம் :**

விரிப்பில் குப்புறப்படுத்தபடி இரண்டு கைகளையும் இருபக்கங்களிலும் உடலுக்கருகில் உள்ளங்கைகள் மேல்நோக்கியவாறு அணைத்து வைத்திருக்க வேண்டும். மூச்சை நிதானமாக உள்ளிருந்து மெல்ல வெளிவிட்ட வண்ணம்இரு கால்களையும் உயர்த்த வேண்டும். இருமுறை மூச்சை உள்ளிழுத்து வெளிவிட்ட பின் மெல்லக் கால்களை தரையில் பதிக்க வேண்டும். ஆரம்பத்தில் சிலகாலம் இரு தடவைகளும் பழகியபின் நான்கு தடவைகளும் செய்யலாம்.

**பயன்கள் :**

ஆஸ்மா, காசநோய் என்பன அணுகாது. கால் நரம்பகள் பலப்படும். கால்ப்பிடிப்பு, கால்வீக்கம் என்பனவும் அணுகாது.

**வச்சிராசனம் :**

படத்தில் காணப்படுவது போல் விரிப்பில் இருந்து கால்களைப் பின்னால் மடக்கி குதிக்கால்களைப் பீடமாக்கிப் பின்பகுதியைப் பதித்த அமர வேண்டும். முதுகு வளையாமல் நேராகவிருந்து முழங்கைகள் இரண்டையும் முழங்கால்கள் மீது வைத்திருக்க வேண்டும். நிதானமாக மூச்சை உள்ளிருந்த வெளியிட்டபடி 3-5 வரை இருக்கலாம். பின்கால்கள் இரண்டையும் ஒரு பக்கவாட்டில் நகர்த்தி கால்களை நீட்டி பழைய நிலைக்கு வரவும்.

**பயன்கள் :**

அஜீரணம் இருக்காது. குதிவாதம், முட்டுவாதம் வராமல் தடுக்கும். ஜீரணசக்தி அதிகரித்து பசியேற்படும்.

**தனுராசனம் :**

விரிப்பில் குப்புறப்படுத்துக்கொண்டு பின்புறமாகக் கால்களை மடக்கிப்பிடித்துக் கொள்ள வேண்டும். மூச்சை வெளிவிட்டபடி கைகள் கால்களை இழுத்து தலையை மேலே தூக்கி உடம்பை வளைத்த முன்னும் பின்னும் அசைய வேண்டும். மேலெழும்போது மூச்சை உள்ளம் பின் வெளிப்பறமாகச் சுவாசிகக் வேண்டும். பின் ஆரம்ப நிலைக்கு வந்து இடமும், வலமும் சரிந்து அசைய வேண்டும்.

**பயன்கள் :**

ஜீரணசக்தி அதிகதிக்கம் சோம்பல் விலகும், இளமையும் துடிப்பும் உண்டாகும். தொந்தி, வயிற்றுக் கொழுப்பு, ஊத்தைச்சதை நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பஸ்சி மோத்தாசனம் :** கால்களை நீட்டி விரிப்பில் உட்கார வேண்டும். இரண்டு கைகளையும் மேலே தூக்கியபடி மூச்சை உள்ளே இழுக்க வேண்டும். மூச்சை வெளியேற்றி வயிற்றை எக்கிக் கொண்டு இரண்டு கைகளையும் நீட்டி இரண்டு பாதங்களையும் பிடித்துக்கொள்ள வேண்டும்.குனிந்து நெற்றியை முழங்கால் முட்டிகளில் பதிக்கவேண்டும். 10 நொடிகள் இந்நிலையிலிருந்து நிமிர்ந்த மூச்சை உள்ளெ இழுக்க வேண்டும். மூன்று தொடக்கம் ஐந்து தடவைகள் வரை செய்யலாம். கருவுற்ற பெண்கள் இதைச் செய்தல் கூடாது.

**பயன்கள் :** தொந்தி குறையும், சக்கரை நோயைக் கட்டுப்படுத்தும். சிறுநீரகம், கல்லீரல்டி என்பனவும் பயன்பெறும்.

**விரலாசனம் :** விரிப்பில் நேராகப்படுத்த இரண்டு கால்களையும் நிதானமாக மேலே தூக்க வேண்டும். கால்களை மேலே உயர்த்தும்போது மூச்சை வெளியிடவேண்டும். பின்னர் கால்களைப் பின்பறமாகப் பதித்த தரையைத் தொட வேண்டும். கால்களை கீழிறக்கும்போது சுவாசத்தை உள்ளிழுக்க வேண்டுமி.

**பயன்கள் :**ஞாபக சக்தி அதிகரிக்கம். தொந்தி குறைவடையும். கால் உளைவு வராது. உயர் இரத்த அழுத்தம் வராது தடுக்கும்.

**சிரசாசனம் :** ஒரு தலையணையில் தலையை வைத்து தலைக்குப் பக்கத்தில் கைகளையும் மடித்த தலையணை மேல் வைத்து கால்களை மேல்மடக்கி உடம்பைத் தூக்கி கால்களையும் மேலே உயர்த்தி குத்தாக நிற்கவேண்டும். பழகும்போது சுவருக்குப் பக்கத்தில் செய்யும்போது முதுகு சுவர்ப்பக்கம் வரவேண்டும். பின்கால்களை மடித்து இறக்கி நிதானமாக பழைய நிலைக்கு வரவேண்டும்.

**பயன்கள் :** மூளைக்கு ஆரோக்கியம் கிடைக்கும். கண்பார்வை நன்றாகத் தெரியும். சளி பிடித்தல், தொய்வு, அஜீரணம் என்பன வராமல் தடுக்கும்.

**சாந்தியாசனம் :** இது இறுதியில் செய்யவேண்டிய ஆசனமாகும். ஆசனங்களைச் செய்து முடிந்தவுடன் விரிப்பில் நேராகப் படுத்து சுவாசம் இயல்பாக இருக்கும் வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். தலையிலிருந்து பாதம்வரை ஒவ்வொரு அங்கமாக நன்கு தளர்த்தி ஓய்வுபெறச் செய்யவும். மூன்று நிமிடங்கள் வரை இவ்வாறு இருந்த ஓய்வெடுத்துப் பின்னர் எழுந்துகொள்ளலாம்.

**பயன்கள் :** ஆசனங்களை விரைவாக ஓடிய இரத்தம் ஆறுதலைப் பெறும். சுவாசம், இதயத்துடிப்பு என்பன சமமடையும். இதய நோய்களுக்கு மிகவும் நல்ல ஆசனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னாரின் பிரிவுத்துயரில் பங்கு கொண்டு கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட பின்வரும் அன்பு உள்ளங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- அபர்ணா உணவகம் - கல்வியங்காடு
- இருபாலை தெற்கு வேளாதோப்பு மதுரை முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபை
- சரவணபவான் குடும்பம், கல்வியங்காடு
- இருபாலை தெற்கு வேளாதோப்பு ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள்
- சண் சுப்பர் மார்க்கட், சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
- சித்தமருத்துவ சமுகம், யாழ் பல்கலைக்கழகம்
- பிரம்மஸ்ரீ ர.கேசவசர்மா, பிரதம குரு, வேளாதோப்பு முத்துமாரி அம்மன்
- நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்
- சண்முகராசா, உஷாந்தன் குடும்பம்
- இ.பரந்தாமர், இ.விஜயகுமார்
- இருபாலை தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
- சங்கிலியன் மன்ற நிர்வாகத்தினர்
- பல்கலைக்கழக ஊழியர் சங்கம், யாழ் பல்கலைக்கழகம்
- அகில இலங்கை இளைஞர் கழகம், கோப்பாய்(து.:.257)
- பட்டதாரிப் பயிலுனர்கள், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்
- கிராம அபிவிருத்திச் சங்கம், இருபாலை தெற்கு
- வேல்முருகன் விளையாட்டுக் கழகம்
- உடற்கூற்றியற்துறை, மருத்துவ பீடம், யாழ்பல்கலைக்கழகம்
- தலைவர், விரிவுரையாளர்கள்,போதனை சாரா ஊழியர்கள், மாணவர்கள் - சித்தமருத்துவப்பிரிவு, யாழ் பல்கலைக்கழகம்
- பீடாதிபதி, உதவிப்பதிவாளர், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் - மருத்துவபீடம், யாழ்பல்கலைக்கழகம்
- Ayngaran Center

71 Rue llouis blanc, Paris 10, France
Ayngaran Center(Jaffna)
85, Point Pedro Road, Nallur, Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகளுடன்.....

என் அருமை தம்பியே...

உன் முகம் காணாது முப்பது வருடங்கள் - நீ
எம்முடன் தொலைபேசியில் அதிகம்
பேசமாட்டாய் ஆனாலும் உன் ஓரிரு
வார்த்தைகளின் அர்த்தம் பல கோடி
தொலைபேசியில் நீ பிரிந்த செய்தியை
அறிந்து துடிதுடித்து கலங்கி விட்டேன்

ஏன் இறந்த அவசரமோ?
ஏமக்கொன்றும் புரியவில்லை மனது நிறைந்த
வலியோடுநாம் துடிக்கிறோம். ஒரு முறையாவது
உன்னைப்பார்க்க நாங்கள் கொடுத்து
வைக்கவில்லை இறுதியில் மேளச்சசத்தத்துடன்
பார்க்க வைத்தாரோ இறைவன் ?

கண்ணிறைந்த நீருடன் கடவுளை
வேண்டுகிறோம் உன் அத்மா சாந்தி
பெற வேண்டும்...

ஓம் சாந்தி ... சாந்தி... சாந்தி...

கிருஸ்ணபாலராஜா
குடும்பம்.கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் மயில்வாகனம் நந்தீஸ்வரன் என்பவர் பற்றி...

நான் இருபாலை தெற்கு கிராமத்தில் கிராம அலுவலராக 2005 - 09 முதல் 2012 வரை கடமையாற்றிய காலப்பகுதியில் இவர் இப்பிரிவில் சமாதான நீதவானாகவும் கடமையாற்றிய போது இக்கட்டான காலங்களில் பொது மக்களுக்கு தன்னால் இயன்ற சேவையாற்றியவர் ஆவார்.

இக்கிராமத்தில் RDS தலைவராக கிராமத்தின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் தன்னால் இயன்ற சேவையை ஆற்றுவதனுடன் குறை நிறைகளை செய்யும் போது செவிமடத்து ஓர் துடிப்புள்ள இளைஞனாகவே செயலாற்றினார்.மேலும் வேளாதோப்பு மதுரை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் காலத்தில் பாதிக்கப்பட்ட பின்பு தான் கோயில் தலைவராக செயற்பட்ட காலத்தில் முழு மூச்சாக செயற்பட்டு இவ்வாலயம் மீள புதுப்பொலிவுடன் இன்று காணப்பட இவரது தொண்டே முக்கிய காரணமாகும்.

இவ்வாறு பலவகையில் கிராமத்துக்கு பல சேவைகளை ஆற்றிய அன்னாரின் பெயர் என்றும் நிலைத்திருக்கும் அரது இழப்பு அவர் தம் உறவுகளுக்கும் ஊருக்கும் பேரிழப்பாகும் அவர் ஆத்மா சாந்தியடைய நானும் பிரார்த்திக்கிறேன்...

சாந்தி ... சாந்தி... சாந்தி...

ஜெயச்சந்திரன்
(முன்னாள் கிராம அலுவலர்கள்)
J/257



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவா மாமா என்ற பொக்கிஷம்...

ஒளிவிளக்காக இருந்த எங்கள் பவா மாமா
அன்புடன் அறிவுரைகள் கூறி
எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த எங்கள்
மாமா

"எங்களைப் பார்க்க எப்போ வருவீர்கள்" எனக்
கதைப்பீர்கள்

வந்து பார்ப்போமென்று இருக்கும் இந்த வருடத்தில்
என் காதில் ஒரு செய்தி – நான் பயந்து விட்டேன்
கண்ணை இமை காப்பது எம்மையெல்லாம் காத்து
நின்றீர்கள்...

வழிகாட்டியாக இருந்த அகல்விளக்கு சொல்லாமல்
கொள்ளமாமல் அணைந்ததுவோ?

தொப்புள் கொடி உறவே என்றும் நீ எமக்கு.
மீண்டும் மழலை போல் பிறந்து எம்முடன்
வாழ்ந்திடுவீர்
அன்று நான் இருக்கிறேன் என சொன்னீர்கள்
இன்றோ உங்களை நினைத்து கண்ணீர் விடும்படி
எம்மையெல்லாம் விட்டுச் சென்று விட்டீர்கள்.

உன் பிரிவென்னும் துயரில் நொந்துவாடும் எம்மை
கண்டிட விரைந்தோடி வந்திடுங்கள் - எங்கள் மாமா
உங்கள் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்திக்கும்
உங்கள்

அபர்ணா குட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் கணபதி சிவம் மாமாரி தேவியே சரணம்...

"ஈன்றி பொழுதிற் பெரிதுவக்கும் தம் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

உண்மை தான் நொந்து சுமந்து பெறுவது எல்லோருக்கும் பொதுவான காரியம் தான். இவன் சான்றோன் - பிறராற் போற்றப்படக் கூடியவன் - உலகில் இன்னும் இருக்க வேண்டியவன் என்று நல்லவர்களால் புகழாரம் கூட்டக்கூடியன் என்ற தெய்வ மகனைச் சுமந்து பெற்றுவிடு என்பதுதான் இக் குறட்பாவில் பொதியப்பட்டுள்ளது.

பவாக்குழந்தை பிறந்ததும் குஞ்சி - தம்பிப்பிள்ளை மயில்வாகனம் சொன்னார் — ஆண் பிள்ளையடா பெரிய தம்பி பெயர் வைக்கவேண்டும் என்றார். "நந்தீஸ்வரன்" என்று வைக்கலாம் குஞ்சி என்றேன். ஆப்படியே பெயர் சூட்டினோம். நுல்லொழுக்க சீலனாய் திகழ்ந்து வளர்ந்த நந்தீஸ்வன் கற்பன கற்று யோகாசனப் பரியனாய் அம்பாள் உபாசகனாய் வளர்ந்து சமூக நற்பணிகளுக்கே தன்னை அர்ப்பணித்தான் அகில இலங்கை சமாதான நீதவான் பட்டம் பெற்று சமூக சேவைகளில் ஈடுபட்டான் இன்னும் பல பட்டங்கள் பெற்று விவேகானந்த சபை உறுப்பினராகவும் செவை செய்து மகிழ்ந்தார்.

"நிலவொளி மலர்" என்கிற மனையாளுடன் கூடி வாழ்ந்தார். இவர் "வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்று வள்ளுவன் காட்டும் நல்லவனாக உன்னையும் காண்கிறேன் நந்தீஸ்வரா இனியும் உனக்குப் பிறவி கிடைக்கும் என்னுடன் கூடி வாழ வா ! வா!! வா!!! என்று கேட்கிறேன்அறைவியிடம் வேண்டுகிறேன் - நந்தீஸ்வரா !

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்த !!!

சிவனடிமை
ஆறுமுகம் நல்லலிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ சாகவில்லை உனக்கு சாவில்லை நண்பா என்றுமே...

நீ வருவாய் என நான் நினைத்திருக்கவில்லையடா வந்தாய் ஒரு மழை நேரம் பசியுடனிருப்பாயென்றெண்ணி வாடா சாப்பிடவென அழைத்து உணவளித்து மகிழ்சியுடன் இருந்து பேசி நில்லடா இன்று நீ நாளை போகலாமென்று மனமகிழ்ந்து நானும் வேலைதனில் மூழ்கி நின்ற வேளை பார்த்து நீர் ஓடினீரோ காலனவன் காலடியை நாடவென உன் விதியும் முடியுமென்று யார் நினைத்தார், இரவெல்லாம் உன் நினைவால் தூங்கவில்லை கண்களும் மனமும் தான் கடுகதியில் உன் செய்திதனை அறியவென துடித்ததடா என் மனமும் பவா சுகமுடனே உள்ளான் என மனமகிழ்ந்து இருக்கையிலே நாலாம் நாளது நண்பகல் வேளைதனில் என் செவியில் விழுந்ததடா பேரிடியாய் பவாவும் மீளாத்துயில் கொண்டு இறையடியில் சோந்து விட்ட துயரெங்கும் பரவி நாமெல்லாம் கூடி நின்று துயருற்றோம். திருமணவீடெங்கும் பெரு நெருப்பாய் பாய்த செய்தி அயலெங்கும் பரவிட துயர் துடைக்கும் உன் மனது இருபாலை பெற்ற பணி, அம்மன் கோயிலதை செம்மையுடன் கட்டியதும் உயர் சமாதான நீதிபதி பதவி பெற்ற பவா நீயும் வைத்திய பீட பணியாளனாய் எல்லோர் மனதிலும் இடம் பிடித்த செம்மல் நீ ! பேச்சைக் குறைத்து செயல்கள் பலவற்றை நேர்மையுடன் நிறைவேற்றி கைப்பொருள் செலவழித்து ஊர் செழிக்க உழைத்து உத்தமனாம் பவா நீ என்றும் சாகவில்லை நின்று நடமாடும் தெய்வமாய் பெற்ற தாய் மகிழ உடன் பிறந்தோர் மகிழ மீழவும் பூமி தன்னில் பிறந்து வந்து எம் துயர் தடைக்க மாட்டாயோ ! என் அருமை நண்பா ! நலமுடனே நான் உன்னை என்றும் மறவேன் பிரியமுடன் தொழுதிடவே உன் அம்மன் துணை நின்று நிலவும் என்றும்....

சாந்தி ... சாந்தி... சாந்தி...

என் உறவுகள் என்றும் நீ வாழ்க...

கு.சிவபாலராசா

மாவட்ட மேற்பார்வை சகாதார பரிசோதகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேளாதோப்பு மதுரை மகாமுத்துமாரி அம்பாள் தோத்திரப்பாடல்...

ஓம் மாரி ஓம் மாரி மதுரை
முத்துமாரி அம்மா
மாரியம்மா மாரியம்மா மதுரை
முத்துமாரி

வேளாதோப்பில் உறைபவளே
மதுரை முத்து மாரி அம்மா
வேண்டி நோர்க்கு அருள் புரிவாய்
மதுரை முத்துமாரி

படர் நாகம் அசைந்தாடும்
மதுரை முத்து மாரியம்மா
பாவங்களை தீர்த்திடுவாய்
மதுரை முத்துமாரியம்மா
ஆதி சிவன் தேவியருள் மதுரை
முத்து மாரியம்மா

கற்பூர நாயகியாம் மதுரை முத்துமாரியம்மா
அரசமர நிழலிலே வீற்றிருக்கும்
மாரி அம்மா
சிங்காசனமாய் வீற்றிருப்பாள்
மதுரை முத்து மாரியம்மா

சென் நெல் கழனியிலே மதுரை
முத்துமாரியம்மா
மணி மணியாய் விளையச் செய்வாய்
மதுரை முத்து மாரியம்மா
நாடி வந்தோர் உள்ளங்களில்
அருள் வாரி வழங்குவதும்
மதுரை முத்துமாரி அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்...

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு அமரர் மயில்வாகனம் நந்தீஸ்வரன் அவர்களின் மரணச்செய்திகேட்டு விரைந்தோடி வந்து எல்லாவிதத்திலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்களுக்கும், அன்னாரின் இழப்பிற்கு பத்திரிகை மூலமும் துண்டுப்பிரசுரங்கள் மூலமும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட அன்பர்களுக்கும் வைத்தியசாலையில் சகல விதத்திலும் உதவிபுரிந்த வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இரங்கல் உரை ஆற்றியவர்களுக்கும் பத்திரிகை வாயிலாகவும், தொலைபேசி மூலமாகவும் தங்கள் அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் மற்றும் எல்லாவிதத்திலும் உதவிபுரிந்தவர்களுக்கும், அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், சபிண்டீகரணப் கிருபையிலும் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சவிரு

மயில்வாகன
+
இராசம்ம

கௌரியம்மா
+
விபுலானந்தன் (அமரர்)
- திருமாறன் (இந்தியா)
- தாரணி (பிரான்ஸ்)
- தசராஜ்
- லோகராஜ்
- சிறி ரஞ்சினி

லோகநாயகி
+
இராமஜெயம்
- சாயிராம்

தவராசா
+
ஞான பூங்கோதை

கிருஸ்

அமரர் மயில்வாகனம் நந்தீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவிருட்சம்

பில்லாகனம்
+
இராசம்மா

ா

காதை

கிருஸ்ண பாலராஜா (கனடா)
+
ராஜீ

கிசோக்குமார்
கிரிக்குமார்
கிரிசாந்தன்
கிரோசன்
துரிதா
சாயிஷா

கருணேஸ்வரன் (பிரான்ஸ்)
+
அருணா

அபிராமி
ஆரணி
அபிநயா

நந்தீஸ்வரன்
+
நில ஒளிமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்...



* நீ உன்னை பலவீனன் என்று ஒருபோதும் சொல்லாதே. எழுந்து நில். தைரியமாக இரு. வலிமையாக இரு . பொறுப்பு முழுவதையும் உன் தோள் மீதே சுமந்துகொள்.

* மக்களுக்கு சேவை செய்யும் தொண்டே மகேசனுக்கு செய்யும் தொண்டு.

* உடலில் வலிமையுடையவன் வலிமை இறைந்தவன் மேல் செலுத்தும் ஆதிக்கத்தை இறைக்க வேண்டும்.

* எதிரிகளை அழிக்க ஒரே வழி அவர்களை நண்பர்களாக்குங்கள்.

* மனிதனாக வாழ முயற்சி செய். தோல்விகளை ஒரு போதும் பொருட்படுத்தாதே. ஓராயிரம் முறை நீ உனது இலட்சியத்தைக் கைக்கொள் ஆயிரம் முறை நீ தோல்வியுற்றாலும் மீண்டும் ஒரு முறை கைக்கொள்ள முயற்சி செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org